# 11.02.2022ம் திகதிய 47வது மாதாந்த சபைக்கூட்டம்

| | | |
|---|---|---|
| நேரம் | : | மு.ப 9.30 மணி |
| காலம் | : | 11.02.2022ம் திகதி வெள்ளிக்கிழமை |
| இடம் | : | சபா மண்டபம் தலைமை அலுவலகம் |
| தலைமை | : | கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் |

**கூட்டத்தில் பங்குபற்றியோர்**

- திரு.பத்மநாதன் மயூரன் - கௌரவ தவிசாளர்
- திரு.இராஜமனோகரன் ஜெயகரன் - கௌரவ உபதவிசாளர்
- திருமதி.கௌசலா சிவா - கௌரவ உறுப்பினர்
- திரு.கணேசு முருகையா - கௌரவ உறுப்பினர்
- திரு.இராசையா இராசலிங்கம் - கௌரவ உறுப்பினர்
- திரு.செல்வநாயகம் சிவலோஷன் - கௌரவ உறுப்பினர்
- திரு.தெய்வேந்திரம் கிரிதரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.கபிரியேல்பிள்ளை திருஞானராஜா - கௌரவ உறுப்பினர்
- திருமதி.ரவிதாஸ்.கோமதி - கௌரவ உறுப்பினர்
- திருமதி.சச்சிதானந்ததேவி செல்லத்துரை - கௌரவ உறுப்பினர்
- திருமதி.அழகேந்திரம் அகிலாண்டரூபி - கௌரவ உறுப்பினர்
- திரு.வல்லிபுரம் ஸ்ரீகணேசா - கௌரவ உறுப்பினர்
- செல்வி.விஜயகுமார் சிந்துஜா - கௌரவ உறுப்பினர்
- திரு.வஸ்ரியாம்பிள்ளை சிறில்றூமன் விஜேந்திரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.கந்தையா குகானந்தன் - கௌரவ உறுப்பினர்
- திரு.சுப்பிரமணியம் விஜயகுமாரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.குமாரசாமி மதுசுதன் - கௌரவ உறுப்பினர்
- செல்வி.குலேந்திரன் பிரிந்தா - கௌரவ உறுப்பினர்
- திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் - செயலாளர்

**கூட்டத்திற்கு சமூகமளிக்காதோர்**

- திரு.தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி - கௌரவ உறுப்பினர்
- திருமதி.வாசுகி சுதாகர் - கௌரவ உறுப்பினர்

மேற்படி கூட்டமானது மு.ப 9.30 மணிக்கு கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்கள் தலைமையில் ஒரு நிமிட மௌன அகவணக்கத்துடன் கூட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். அடுத்து சபைக்கீதம் இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் அனைவருக்கும் வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு இன்றைய கூட்டத்திற்கு கௌரவ உறுப்பினர் திரு.தா.தியாகமூர்த்தி அவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அகியோர் சமூகமளிக்க முடியவில்லை என தொலைபேசி மூலமாக அறியத்தந்துள்ளனர் என சபைக்குத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து நிகழ்ச்சி நிரலில் முதலாவது விடயம் சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரித்தல். 46 வது மாதாந்த கூட்ட அறிக்கை (ஜனவரி), 30.12.2021ம் திகதிய 26வது விசேட கூட்ட அறிக்கை ஆகியன அங்கீகரித்தல். குறித்த அறிக்கைகளில் திருத்தமிருந்தால் அதனைத் தெரிவிக்குமாறும் சரியாயின் அவற்றினை அங்கீகரிக்குமாறும் தெரிவித்ததை தொடர்ந்து குறித்த அறிக்கைகள் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 11.02.2022/01**

11.01.2022ம் திகதிய 46வது சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/02**
30.12.2021ம் திகதிய 26வது விசேட கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து தவிசாளர் அறிவிப்புகள். குறித்த அறிவிப்பில் கௌரவ தவிசாளர் அவர்களினால் காரைமுனங்கு தவிர்ந்த ஏனைய 6 மயானங்களிலும் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. 60 % மாக வேலைகள் நிறைவடைந்துள்ளது. விவசாயத்திணைக்களத்தினால் Garbage cutter மற்றும் Bogat ஆகியன எமக்கு வழங்கப்பட்டுள்ளது. Bogat எமது நீண்ட கால கனவு செயலாளர் முயற்சியால் நேற்றைய தினம் கிடைக்கப்பெற்றுள்ளது. எமது வாய்க்கால்கள், பசளை தயாரிக்கும் நிலையம் ஆகியவை பராமரிக்க இலகுவாக இருக்கும். விவசாயத்திணைக்களத்திற்கு இந்நேரத்தில் நன்றிகளை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் எமது அலுவலகத்திற்கு 15 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் அலுவலக கடமைகளை ஆற்றவும் ஏனைய பன்னிரண்டு உத்தியோகத்தர்கள் வட்டார ரீதியாக கடமையாற்றவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தான் தற்போது இங்கு அமர்ந்துள்ளனர் எனத் தெரிவித்தார். அத்துடன் ஆடியபாதம் வீதி அழகுபடுத்தல் வேலைகளில் முதற்கட்டமாக மருத்துவபீட முன்வீதி அழகுபடுத்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை முன்பக்க வீதி மற்றும் திருநெல்வேலி சந்திப்பகுதி வேலைகள் ஆரம்பமாகவுள்ளது எனத் தெரிவித்தார்.

தவிசாளர் அறிவிப்பில் நல்லூர் தொகுதிக்குட்பட்ட வெள்ள அனர்த்தமுள்ள பகுதிகளை பிரதேசசெயலர் தலைமையில் RDA, RDD அனர்த்த முகாமைத்துவத்தினர், பிரதேச செயலாளர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் அடங்களாக களவிஜயம் செய்து குறித்த விடயம் ஆராயப்பட்டுள்ளது. அதற்கமைவாக சில சில தீர்வுகள் தந்துள்ளனர். அவற்றினை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதற்கு சபை ஒத்துழைப்பினை வேண்டினார்.

அவர் மேலும் கூறுகையில் தெரிவு செய்யப்பட்ட உப குழுக்கள் தமது சிபார்சுகளை மாதாந்தம் சபைக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதுடன் உப குழுக்கள் பெயரளவில் இருக்காது வினைத்திறனாக மக்களுக்கு சேவை புரியும் குழுவாக மாற வேண்டும். சுகாதாரக்குழுவாக இருந்தால் எமது பசளை தயாரிக்கும் நிலையத்தை பார்வையிடலாம். காக்கைதீவில் மாநகரசபையால் வழங்கப்பட்டுள்ள இடம் தூய்மையின்மை என எமக்கு முறைப்பாடுகள் வந்துகொண்டிருக்கின்றது. சுகாதாரக்குழு அதனை மேற்பார்வையிடும் சந்தர்ப்பத்தில் குறித்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்தார். சனசமூக நிலையக்குழுவின் செயற்பாடுகளுக்கு உதவியாக எமக்கு துடிப்பான சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கிடைத்திருக்கின்றார். அவர் மூலமாக உறங்கு நிலையிலுள்ள சனசமூகநிலையங்களை இயங்கு நிலைக்கு கொண்டுவர வேண்டும். ஏற்கனவே 52 சனசமூகநிலையங்கள் பதிவில் உள்ளபோதிலும் 46சனமூகநிலையங்களே இயங்குநிலையில் உள்ளது. 6 சனசமூகநிலையங்கள் உறங்கு நிலையில் உள்ளது. அதனையும் பார்வையிட்டு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலமாக சனசமூக நிலையக்குழு இயங்கு நிலைக்கு கொண்டுவர வேண்டும்.அத்துடன் சுகாதாரக்குழு தலைவரிடம் வினயமாக கோருவது சபையின் செயற்பாடுகளுக்கு சுகாதாரக்குழு மிகவும் இன்றியமையாதது. ஆகவே சுகாதாரக்குழு விரைவாகவும் வினைத்திறனாகவும் செயற்படுத்த வேண்டும் எனவும் குறித்த சுகாதாரக்குழுவின் அறிக்கை ஒவ்வொரு மாதமும் சபைக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களுக்கான மலசலகூடம் வழங்குவதற்கான பயனாளிகள் விபரம் 05.02.2022ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. இதுவரை சமர்ப்பிக்காத உறுப்பினர்கள் மிக விரைவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சி நிரலில் 03வது விடயம் கால அவகாசத்துடனான பிரேரணைகள். அவற்றில் முதலாவது கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்களின் பிரேரணை பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள குழுக்களுக்கு வரியிலிருந்து விலக்களிப்பதற்கான கொள்கை உருவாக்கம். அதாவது வறுமைக்கோட்டிற்கட்பட்ட பின்தங்கியவர்களின் சோலை வரியினை முற்றாக விலக்கழிப்பதா அல்லது குறைப்பதா என சபை தீர்மானிக்க வேண்டும். ஏற்கனவே சோலைவரி 4% அறவிடப்பட்டு வருகின்றது. இவ்வாறு கொள்கை உருவாக்கினால் மக்கள் பயன்பெறுவர். நல்லூர் பிரதேசசபையும் ஒரு

முன்மாதிரியான சபையாக ஏனைய சபைகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும். அதற்கமைவாக தங்களின் கருத்துக்களை பதிவுசெய்யுமாறு தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுபபினர் திரு.க.திருஞானராசா அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு சோலைவரி தொடர்பாக கருத்துரைக்கையில் சோலை வரி கட்டியவர்கள் தமது கட்டட விண்ணப்பங்களை பெயர்மாற்ற விண்ணப்பங்களை எடுத்து வருவார்கள் அதில் தற்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் மேற்கொண்ட விடயம் நல்ல விடயம். வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களுக்கு சோலைவரியை அறவிடாது ஏனெனில் அவர்களுக்கு சபையினால் வாழ்வாதாரம் வழங்குகின்றோம். அவர்களிடம் சோலைவரியினையும் அறவிடுகின்றோம். சோலைவரியினைச் செலுத்த முடியாது சிலர் இருக்கின்றனர். அதனால் நீண்ட காலமாக அவை செலுத்தப்படாது நிலுவையாக காணப்படுகின்றது. அவர்களை ஆராய்ந்து அவர்களுக்கான நிவாரணமாக இந்த சோலைவரியை குறைந்தளவிலோ அல்லது முற்று முழுதாகவோ நீக்குவதற்கு இங்கு கலந்தாலோசிக்கப்படுகின்றது. தமது கருத்தாக வறுமைக்கோட்டிற்குள் இருப்பவர்களிடம் வரியை அறவிடாது விடலாம் என தாம் நினைப்பதாகவும் ஆனால் வரியை அறவீடு மேற்கொள்ளாது விட்டால் எமக்கான வேலைத்திட்டம் என்னவென்று அவர்கள் சிந்திக்ககூடும். அதற்கான அனுமதிகள் எல்லாம் வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஏதாவது தேவைப்பாடு ஏற்பட்டு சோலைவரி கட்டட விண்ணப்பம் தொடர்பாக வரும் போது அவை எல்லாம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே முன்னேற்பாடான நல்ல விடயத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்வீர்கள் என தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் 1987ஆம் ஆண்டில் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் உப பிரிவு 135 (உ) பிரதேசசபையின் தீர்மானம் ஒன்றினால் ஏழ்மையினை காரணம் காட்டி விசேடமாக விலக்களிக்க சட்டம் உள்ளது. குறித்த விடயம் தொடர்பாக கொள்கை தீர்மானத்தை எடுத்து விலக்களிக்கும் பெயர் விபரங்களைப் பெற்று சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்தை பெற்று மேல்நடவடிக்கைகக்காக அனுப்பலாம் என்றார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு கருத்துரைக்கையில் வரிக்குறைப்பு என்பது நல்ல விடயம். ஆனால் சிறு தொகை கூட அறவிடாது முழுமையாக விலக்கழித்தால் அது நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட காணியாகவோ அல்லது வீடாகவோ அமைக்கும் போது பிரதேசசபைக்கும் அவர்களுக்கும் எந்தவித தொடர்பும் இருக்காது. ஆகவே முற்றாக நீக்காது ஒரு சிறிய தொகையினை அறவிட வேண்டும் எனத்தெரிவித்தார்.

அதன்போது பதிலளிக்கையில் கௌரவ தவிசாளர் அவர்கள் தற்போது வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு முற்றாக விலக்கழிப்பதா அல்லது வரியினை குறைப்பதா என தீர்மானித்து கொள்கை உருவாக்கம் மேற்கொண்டு அதனை சபை அனுமதியுடன் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெறல். இவ்வாறு வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் என இனங்காணப்பட்டவர்களுக்கு சோலைவரி பற்றுச்சீட்டு வழங்கப்படும். அதில் விலக்கழிக்கப்பட்டுள்ளது என்ற வாசகம் எழுதப்பட்டிருக்கும். அதில் மாற்றுக்கருத்து ஏதும் இல்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு வரி அறவீடுகள் தொடர்பாக 1980 ஆம் ஆண்டுகளிலிருந்து அப்போது அறவிடப்பட்டது போல தான் அறவிடப்பட்டு வந்துள்ளது. தற்போது அரசாங்கத்தினால் மறுசீரமைக்கப்பட்டு வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. சிலர் வரி கூட்டப்பட்டுள்ளது எனக்கூறுகின்றனர். ஆனால் இதுவரை குறைவாக கட்டப்பட்டு வந்துள்ளமையினை மறந்துள்ளனர். ஆனால் வரி அதிகரிப்பு சிலருக்கு பாதிப்பாகவே உள்ளது. வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களை கிராமசேவையாளர் மூலமாக விபரத்தை எடுத்து அவர்களது கட்டணத்தை முற்றாக நீக்காது சிறு தொகையினை அறவிட்டால் சிறப்பாக இருக்கும் எனத்தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் ஏற்கனவே நிலுவையாக உள்ளவற்றை அறவிட முடியாத நிலை காணப்படுகின்றது. அதற்கமைவாக கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா குறிப்பிட்டதை போல நாம் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் என வாழ்வாதாரம் வழங்குகின்றோம். திரும்ப அவர்களிடமிருந்து சேலை வரி அறவிடப்படுகின்றது. அதனிலும் பார்க்க நாம் அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்க வேண்டியதில்லையே எனத்தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்து கருத்துரைக்கையில் இது நல்ல விடயம். வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களை எந்த அடிப்படையில் தெரிவு செய்யவுள்ளீர்கள். கிராமசேவகர் மூலமாகவோ அல்லது கௌரவ உறுப்பினர் மூலமாகவா எனக் கேட்டார். அவர் மேலும் கூறுகையில் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் எனும் போது எல்லோரும் தாம் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் என வருவார்கள். அவ்வாறு வரும் போது ஒரு பிரச்சனை ஏற்படும். அத்துடன் காணியை அத்தாட்சிப்படுத்துவதற்கு சோலை வரி முக்கியமானது எனத்தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் பதிலளிக்கையில் கிராமசேவகர் மூலம் தெரிவு செய்யப்பட்டு அதனை பிரதேச செயலர் உறுதிப்படுத்தி வழங்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு விலக்கழிக்கலாம். அவ்வாறு விலக்கழிக்கப்பட்டவர்களுக்கு சோலைவரி பற்றுச்சீட்டு வழங்கப்படும். அதில் விலக்கழிப்பு என எழுதப்பட்டிருக்கும். குறித்த பற்றுச்சீட்டு அனைத்து விடயங்களுக்கும் செல்லுபடியாகும் எனத்தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களை இனம் கண்டு அவர்களுக்கு விலக்கழிப்பு செய்து அவர்களுக்கு பற்றுச்சீட்டு வழங்குவது நன்று. தமது வட்டாரத்தில் 10 குடும்பங்களை தாம் இனங்கண்டுள்ளதாகத் தெரிவித்து குறித்த செயற்பாட்டிற்கு தாம் பூரண ஆதரவினை வழங்குவதாகத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தினைத் தெரிவித்துக் கொண்டு எமது சபையூடாக கௌரவ தவிசாளர் அவர்கள் முன்வைத்துள்ள கருத்தானது வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்கான வரி விலக்கழிப்பு என்பது மக்கள் மத்தியில் சிறந்த வரப்பிரசாதமாக இருக்கும். ஆனால் அவர்களை தெரிவு செய்யும் போது பிரதேச செயலர் ஊடாக சமுர்த்தி பெற்றுக் கொண்டிருப்பவர்கள் அனைவரும் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களாக கருதப்படுவார்கள். அந்த சிபார்சின் அடிப்படையில் விலக்கழிப்பு மேற்கொள்ளும் போது சபையும் பாதிக்கப்படாத வகையிலே குறித்த திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். சபையின் வருமானம் இழக்கப்படும் போது சபையின் ஏனைய விடயங்களும் பாதிக்கப்படக்கூடாது. அந்த மக்களுக்கு வாழ்வாதாரம் வழங்குகின்றோம் என்ற அடிப்படையில் அவர்களிடம் வரியை அறவிடுவது கௌரவ தவிசாளர் குறிப்பிட்டது போல ஏற்புடையதாகாது தான். ஆனால் அந்த விடயத்தில் மதிநுட்பமாக செயற்பட்டு அவர்களை தேர்ந்தெடுத்து சபையின் அங்கீகாரத்துடன் குறித்த விலக்கழிப்பினை மேற்கொள்ளும் போது மக்களின் வரவேற்பை பெறுவதுடன் ஏனையவர்கள் பாதிக்கப்படாத வகையில் அதனை மேற்கொள்வதில் கவனமாக செயற்பட வேண்டும். சபையின் நிலுவைத்தொகை பல மில்லியன்களாக காணப்படுகின்றது. அவை எவ்வாறு அறவாக்கப்படுகின்றது என்பதை கருத்தில் கொள்ளும் போது சபையின் வருமானத்திலே பெரும் தொகையானது இன்று நிலுவையில் உள்ளது. தொடர்ச்சியாக பெரும் தொகையினை அப்படியே வைத்திருப்பது ஒரு சபைக்கு ஆரோக்கியமாகதாக அமையாது. அந்த விடயத்தில் மதிநுட்பமாக கையாண்டு உண்மையில் மக்கள் பாதிக்கப்படாத வகையில் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களுக்கு விலக்கழிப்பது சிறந்ததாக அமையும். அதற்கு தமது ஆதரவினையும் தெரிவித்து விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டின் மூலம் இதற்கு முன்னர் செலுத்தியதை விட அதிகரித்து காணப்படுவதாக பலராலும் பேசப்படுகின்றது. நீண்ட காலத்திற்கு பின்னர் மதிப்பீடு செய்தமையினால் மிக அதிகரித்த வரி கட்டப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களிடம் இருந்து விலக்கழிப்பு செய்யும் போது அது சிறந்ததாக அமையும். அதனை வரவேற்று சிறந்த திட்டமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தமது கருத்தாகும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் மு.ப. 10.15 மணியளவில் கூட்டத்திற்கு வருகை தந்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் நீண்ட காலமாக பல மில்லியன் நிலுவையாக காணப்படுவதனால் வருகின்ற மாதத்தில் இருந்து நடமாடும் சேவையினை வட்டார ரீதியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது அதற்கும் வட்டார உறுப்பினரின் பூரண ஒத்துழைப்பினை கேட்டுக்கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலேசன் அவர்கள் அனைவருக்கு வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு கௌரவ தவிசாளர் அவர்களினால் கொண்டு வரப்பட்ட வறுமைக்கோட்டிற்குட்பட்ட பின் தங்கியவர்களுக்கான சோலைவரி விலக்கழிப்பு என்பது வரவேற்கத்தக்க விடயம். நாம் மக்களுக்கு சேவையாற்றவே வந்துள்ளோம். அந்தவகையில் இந்த விடயத்தை தாம் வரவேற்பதாகவும் ஆனால் எமது சபையின் நிலுவை பல மில்லியன் ரூபாவில் இருக்கின்றது. அதனையும் கருத்தில் கொண்டு கிராமசேவையாளர் மூலம் பிரதேச செயலர் சிபார்சுடன் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களை தெரிவு செய்வதாக கௌரவ தவிசாளர் அவர்கள் தெரிவித்திருந்தார். உண்மையில் வரவேற்க தக்க விடயம். ஒவ்வொரு வட்டாரத்திலும் வட்டார உறுப்பினருக்கு அடுத்து கிராம சேவகருக்கு தான் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் விபரம் தெரியும். அதனை பிரதேசசெயலர் சிபார்சு எமக்கு இன்னும் வலுவாக இருக்கும். ஆகவே எமது சபையின் இவ்வருட வரவுசெலவுத்திட்டத்தை பாதிக்காத வகையிலும் வரிக்குறைப்பானது எமது வேலைத்திட்டத்தை பாதிக்காத வகையிலும் கொண்டு செல்ல வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு தமது முழு ஆதரவினையும் வழங்குவதாக தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் கொள்கை அளவில் தான் தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் அதற்கு மேலதிக அனுமதியும் கிடைக்கப்பெற வேண்டும். இவ்வாறு சோலைவரியினை விலக்கழிப்பதால் பாதீட்டில் பாதிப்பினை ஏற்படுத்தாது என தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

அதனைத்தொடாந்து கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு தங்களினால் முன்வைக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குட்பட்ட பின்தங்கியவர்களுக்கான சோலைவரி விலக்கழிப்பு என்பது வரவேற்க கூடிய விடயம். ஒவ்வொரு கிராமத்திலும் குறித்த விபரத்தை எவ்வாறு எடுப்பது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு லிமிட் இருந்தால் நன்று எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் அது பிழையான நடைமுறையாக மாறிவிடும். இது அபிவிருத்தி திட்டம் இல்லையே இது வட்டார ரீதியாக இல்லாது நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட ஒட்டுமொத்த மக்களுக்குள் தெரிவு செய்வது எனத்தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் விரிவாக ஆராயப்பட்டது. அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.வ. ஸ்ரீகணேசா அவர்கள் கருத்துரைக்கையில் கஸ்ட பிரதேசம் என்று சில பிரதேசங்கள் எல்லா விடயத்திலும் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது. அதில் வட்டார ரீதியில் எத்தனை குடும்பங்கள் என்று கொள்கை அடிப்படையில் முடிவெடுப்பது முடியாது. ஒரு பிரதேசசெயலகத்தில் ஒருசில பிரதேசங்கள் வறுமைக்கோட்டிற்குட்பட்டது என அடையாளப்படுத்தப்பட்டிருக்கும். எமது கொள்கை ரீதியாக முடிவு எடுக்கப்பட்டாலும் தற்போதைய ஆதன பெறுமதி அத்துடன் கௌரவ ஆளுநர் அனுமதி எந்தவகையில் அமையும் என்பதும் இது மக்கள் சார்ந்தது. இதில் தமது பகுதி மக்கள் கூடுதல் நன்மையடைவார்கள். வறுமைக்கோட்டிற்குட்பட்டவர் எந்த இடத்தில் அதிகமாக இருந்தாலும் நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட பகுதி என்ற முறையில் கையாள வேண்டுமே தவிர வட்டார ரீதியான அணுகுமுறை என்பது பொருத்தமற்றதாக இருக்கும். அந்தவகையில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு முற்றுமுழுதாக விலக்கழிப்பு அளிக்கப் போகின்றோம் என்பது அவர்களைக் பொறுத்தது. அவர்கள் தமது ஆவணங்களை கிராமசேவையாளர் மூலமாக பிரதேசசெயலர் உறுதிப்படுத்தி வரும் போது அது எமக்கு இலகுவாக இருக்கும் என்பது தமது கருத்தாகும் எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் இதனை வட்டார ரீதியாக எடுக்க முடியாது. சமுர்த்தி பெறுபவர்கள் எல்லோரும் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் அல்ல. ஆகவே நாம் மிக நுணுகி ஆராய்ந்து வருடாந்தம் ரூபா 50.00 ஆவது அறவிடலாம் எனத்தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டு கருத்துரைக்கையில் குறித்த விடயம் நேற்றைய நிதிக்குழுவில் ஆராயப்பட்டது. வரி அறவிடுதல் என்பது குறித்த ஆதனத்தில் வாழ்ந்து வருவதற்குரிய நிலத்தின் அடையாளம். அதனைக் குறைக்கலாம்.. ஏழ்மைக்காக எடுக்கின்ற நடவடிக்கையினை தாம் வரவேற்பதாகவும் வரியை முற்றாக நீக்குவதை தாம் மறுப்பதாகவும் ஒட்டுமொத்தமாக வரியை நீக்காது அவர்கள் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்கள் என உறுதிப்படுத்தி கடிதம் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு பதியளவு அல்லது குறித்த வீதத்தை கொள்கையளவில் உருவாக்குவோம். ஒட்டுமொத்தமாக நீக்காது குறைக்கலாம்

அவர்களுக்கும் தாம் நல்லூர் பிரதேசசபைக்கு வரி கட்டுவதாக ஒரு திருப்தியும் இருக்கும். எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் கருத்துரைக்கையில் சமுர்த்தி எடுப்பவர்கள் எல்லோரும் இதற்குள் வர முயற்சிப்பார்கள். ஆகவே குறித்த விடயத்தை கிராமசேவையாளர் மற்றும் பிரதேசசெயலருக்கு விரிவாக விளக்கமளித்து அதனூடாக சிபார்சு செய்பவர்களுக்கு முற்றாக நீக்காது குறைவாக அறவிடலாம் எனத் தெரிவித்தார்.

குறித்த விடயம் சபையில் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது. அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் கருத்துரைக்கையில் வெளிநாட்டில் உள்ளவர்களின் சோலைவரியினை 3 வருடங்களுக்கு வரியினை செலுத்த தவறின் குறித்த ஆதனத்தை நல்லூர் பிரதேசசபை கையகப்படுத்துவதற்குரிய ஏதுக்களை உருவாக்கும் என அறிவித்தல் வழங்குவதன் மூலமாக வெளிநாட்டில் உள்ளவர்களது வரி நிலுவையினைக் குறைக்கலாம் எனத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்த கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு கருத்துரைக்கையில் கௌரவ தவிசாளர் அவர்களது குறித்த சிந்தனை சிறப்பானது. அடிமட்ட மக்களை நினைக்கக்கூடிய பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய நல்லதொரு செயற்பாடு. தற்போது கோவிட் தொற்று காரணமாக பொருளாதார ரீதியில் அவர்களது தொழில் முடக்கம் காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இந்த வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள். அவர்கள் இன்று தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். இந்த நிலையில் எமது கொள்கை வகுப்பானது மிக பிரயோசனமானது. அத்துடன் இச்சந்தர்ப்பத்தில் காலம் காலமாக வரி அறவிடாத இடங்களும் இருக்கின்றது. தமது பகுதியில் வரி அறவிடப்படுவதில்லை. இது தொடர்பாக தாம் ஒரு பிரேரணை சமர்ப்பித்திருந்ததாகவும் அதற்கு முன்னாள் தவிசாளர் அவர்கள் நடமாடும் வரி அறவிடுதலை மேற்கொண்டு அந்த வரியை அறவிடுவதாகவும் அதற்கான முன்னேற்பாடுகளை உரிய திணைக்களங்களுக்கு அனுப்புவதாகவும் தீர்மானமாக எடுக்கப்பட்டது எனவும் இன்று 5 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் வரி அறவிடப்படுவதில்லை. வரி என்பது ஆதனங்களின் பெறுமதியினை தீர்மானிக்கின்ற விடயம். எமது பிரதேசத்தில் புதிது புதிதாக கட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. அக்கட்டங்களை ஒழுங்கமைப்பதற்கு வட்டார உறுப்பினர் என்ற வகையில் கட்டங்களை சீரமைக்க முற்படுகையில் அங்குள்ள மக்களால் கூறப்படும் விடயம் நல்லூர் பிரதேசசபைக்கு வரி அறவிடுவதில்லை. அங்கு வந்து பார்ப்பதுமில்லை. அவ்வாறான நிலையில் நாம் அனுமதிக்கு எவ்வாறு செல்வது எனக் கேட்கின்றனர். அவற்றில் எமது தவறும் உள்ளது. அறவிடவில்லை என ஆர்ப்பரிப்பவர்கள் அறவிடவேண்டும். .எமது புதிய தவிசாளர் அவர்கள் இதனைச் சீர்ப்படுத்துவார் என்ற நம்பிக்கை தமக்குள்ளதாகவும் தெரிவித்து குறித்த கொக்கை உருவாக்கத்திற்கு தமது முழு ஆதரவினை வழங்குவதாக தெரிவித்தார்.

அதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் பதிலளிக்கையில் குறித்த பகுதி ஒரு எல்லைப்பிரதேசமாக இருப்பதனால் சில இடங்களில் சோலை வரி அறவிடுவதில் இடர்பாடு காணப்படுகின்றது. விரைவில் சுமுகமான தீர்வு எட்டப்படும் எனத்தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.க.குகானந்தன் அவர்கள் மு.ப. 10.30 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகை தந்தார்.

அதனைத்தொடர்ந்து சோலை வரியினை முற்றாக விலக்கழிப்பதா அல்லது குறைப்பதா என மீண்டும் சபையில் விரிவாக ஆராயப்பட்டது. அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் குறித்த விடயம் தொடர்பாக செயலாளர் விளக்கமளிப்பார் எனத்தெரிவித்ததை தொடர்ந்து செயலாளர் அவர்களினால் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு பிரதேசசபையின் கடமை கோட்பாடு ஒரு சமூகத்தின் பின்தங்கிய மக்களுக்கு கை கொடுக்க வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. அந்த அடிப்படையில் தான் வாழ்வாதாரம் வழங்கப்படுகின்றது. அதே நேரத்தில் ஆதனவரி விடயத்தில் கொள்கை உருவாக்குதல். அதாவது கொள்கை உருவாக்கல் எனும் போது வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களுக்கான ஆதனவரியை முற்றாக நீங்குதல் அல்லது 4 வீதமாக இருக்கின்ற வரியை 2 வீதமாக குறைத்தல் என்பது கொள்கை உருவாக்கம். கொள்கையினை நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அதற்கான தகவல்களை எடுத்து மீண்டும் சபையில் சமர்ப்பித்து அதன்பின்னர் கலந்தாலோசித்து முடிவினை பெறலாம். இப்போது ஒரு

கொள்கை உருவாக்கம் செய்வதேயாகும் எனத்தெரிவித்ததை தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/03**
கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்களது பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள குழுக்களுக்கு ஆதன வரியிலிருந்து விலக்களிப்பதற்கான கொள்கை உருவாக்கல் எனும் பிரேரணைக்கு அமைவாக நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில் வசிப்பவர்களில் மிகவும் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டு கிராம சேவையாளர் மூலம் பிரதேசசெயலரால் உறுதிப்படுத்தப்பட்டு கடிதம் சமர்ப்பிப்பவர்களுக்கு 4 வீதத்திலுள்ள ஆதன வரியினை 2 வீதமாக குறைத்து அறவீடு மேற்கொள்வதற்கான கொள்கை உருவாக்கம் மேற்கொண்டு கௌரவ ஆளுநர் அனுமதியினைக் கோருவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் மு.ப.10.55 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

அடுத்து வட்டாரத்திற்கு என புதிய நியமனம் பெற்று வந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வட்டார ரீதியாக நியமிக்கப்பட்ட பெயர் விபரம் கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு அவர்களை கௌரவ உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் மு.ப.10.57 மணியளவில் கௌரவ தவிசாளர் அனுமதியுடன் சபைக்கூட்டத்திலிருந்து வெளிச்சென்றார்.

**தேனீர் இடைவேளைக்காக சபை மு.ப. 11.00 – 11.15 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.**

தேனீர் இடைவேளையினைத் தொடர்ந்து 11.15 மணியளவில் சபைக்கூட்டமானது ஆரம்பமாகியது. தேனீர் இடைவேளையின் பின்னர் கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா, கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம், கௌரவ உறுப்பினர் திரு.க.குகானந்தன், செல்வி.கு.பிரிந்தா ஆகியோர் சமூகமளிக்கவில்லை.

கால அவகாசத்துடனான பிரேரணையில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களின் முதலாவது பிரேரணையான வடிகாலமைப்பு தொடர்பான சட்டநாதர் வீதி எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/04**
கௌரவ உறுப்பினர் திரு தெ.கிரிதரன் அவர்களது வடிகாலமைப்பு தொடர்பான சட்டநாதர் வீதி எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக்கொள்வதற்கு கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து தமது பிரேரணை தொடர்பாக கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் கருத்துரைக்கையில் சட்டநாதர் வீதி வடிகாலானது "I Project" ஆல் புனரமைக்கப்பட்ட எனவும் குறித்த வீதி வடிகால் புனரமைப்பினை வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த வீதி மாநகரசபைக்குச் சொந்தமானது. 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபை தேர்தல்களுக்கு முன்பே இவ்வீதி தொடர்பாக நல்லூர் பிரதேசசெயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் குறித்த வீதி தொடர்பாக கலந்துரையாடப்பட்ட விடயம். ஆனால் 2018ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்ற கூட்டத்தில் பிரதேச செயலரும் கலந்துகொண்ட கூட்டத்தில் குறித்த வீதி புனரமைப்பின் போது வடிகால்கள் எந்தெந்த இடங்களில் அமைய வேண்டும் குறித்த கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வலியுறுத்தியிருந்தோம். ஆனால் அவர்கள் அவ்விடயங்களை உள்வாங்காது ஒரு சில இடங்களில் மட்டும் தான் வடிகாலமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. அது ஒரு பாரதூரமான பிரச்சனையாக இருக்கின்றது. அது நல்லூர்

பிரதேசசபைக்கு ஒருபக்கமாகவும் மாநகரசபைக்கும் சொந்தமானது. இருக்கின்றது. இரு பக்கமும் வடிகாலமைப்பு தேவை என ஏற்கனவே வீதி அதிகார சபைக்கு பிரதேசசெயலர் மூலமாக குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி சீர்செய்து தருமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. குறித்த வீதி பராமரிப்பு காலம் இன்னும் 2 வருடங்களுக்கு வீதி அதிகார சபைக்கு இருக்கின்றது. ஆனால் அவர்கள் காப்பெற் வீதியை அமைத்துவிட்டு சென்றுள்ளனர். ஆனால் side clearing ஒன்று சரிவரச் செய்து முடிக்கவில்லை. எனவே அந்த வேலைத்திட்டத்தை செய்ய வேண்டும். இது தொடர்பாக மக்கள் குறிப்பிட்டும் அவர்கள் அதனை செய்யாது தங்களுடைய செயற்பாட்டில் ஒருசில இடத்தில் வடிகால்களை அமைத்து விட்டுச் சென்றுள்ளனர். மீளவும் மக்களின் கையொப்பத்துடன் பிரதேசசெயலருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. எனவே அது தொடர்பாக மாநகர சபை ஊடாகவும் மற்றும் வீதி அதிகாரசபை மற்றும் கருத்திட்ட எந்திரி ஆகியோருக்கு பிரதேசசபை ஊடாக கடிதம் அனுப்ப வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களின் குறித்த விடயத்தை பரிசீலிக்குமாறு வீதி அதிகாரசபைக்கு கடிதம் அனுப்புவோம் எனத் தெரிவித்ததை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/05**
கௌரவ உறுப்பினர் திரு தெ.கிரிதரன் அவர்களது வடிகாலமைப்பு தொடர்பான சட்டநாதர் வீதி எனும் பிரேரணைக்கு அமைவாக குறித்த வீதி காப்பெற் வீதியாக தரமுயர்த்தப்பட்டமை தொடர்பில் ஏற்கனவே காணப்பட்ட வடிகால்கள் சில அமைக்கப்படாமை மற்றும் side clearing மேற்கொள்ளப்படாமை தொடர்பாக குறித்த வீதி புனரமைப்பு தொடர்பாக மீள் பரிசீலனை மேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடிதம் அனுப்புவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களது பிரேரணையில் அடுத்து திண்மக் கழிவகற்றலை முன்பள்ளி முதல் பாடசாலை வரை எமது எதிர்கால சந்ததியினரை வினைத்திறனானவர்களாக உருவாக்குதல் எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கோரிய போது கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களினால் குறித்த பிரேரணை முன்மொழிவதற்கு முன்னர் சிறு வேண்டுகோள் எனத் தெரிவித்து 2019ஆம் ஆண்டு குறித்த பிரேரணை தம்மால் கொண்டு வரப்பட்டு 5 முன்பள்ளிகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு பின்னர் ஆரம்ப பள்ளிகளுக்கு விஸ்தரிக்க வேண்டும் என சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் கொரோனா தொற்று காரணமாக பின்னர் செய்ய முடியவில்லை எனவும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட விடயம் என்பதனை தாம் வினயமாக குறிப்பிடுவதாகவும் இதனை பிரேரிப்பதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களினால் தாம் முன்பள்ளிகளுடன் மட்டும் நிற்காது பாடசாலைகள் வரை கொண்டு செல்வதே தமது திட்டம் எனவும் தெரிவித்த போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/06**
கௌரவ உறுப்பினர் திரு தெ.கிரிதரன் அவர்களது திண்மக் கழிவகற்றலை முன்பள்ளி முதல் பாடசாலை வரை எமது எதிர்கால சந்ததியினரை வினைத்திறனானவர்களாக உருவாக்குதல் எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக்கொள்வதற்கு கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களினால் இன்று எல்லா வட்டாரத்திலும் திண்மக்கழிவகற்றல் ஒரு பாரதூரமான விடயமாக இருக்கின்றது. இந்த திண்மக்கழிவகற்றலை வினைத்திறனாக கையாள்வதற்கு பாடசாலை மூலமாக எதிர்கால சந்ததியினரை வழிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. அந்தவகையில் எதிர்கால சந்ததிக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் முன்பள்ளிக்கல்வியில் இருந்து பாடசாலைக் கல்வி வரை திண்மக்கழிவகற்றலை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி எவ்வாறு தரம் பிரித்து குப்பைகளை அகற்றுவது என நாம் ஒரு விழிப்புணர்வினை எமது பிரதேசசபைக்குட்டவர்களையோ கல்வி சார் வளவாளர்களையோ அணுகி அவர்கள் ஊடாக

பாடசாலைகள் மட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகளை செய்வோமேயானால் நல்ல ஆரோக்கியமான செயற்பாடாக இருக்கும் என்பதுடன் எதிர்கால சந்ததியினரும் ஆரோக்கியமானதாக இருக்கும் எனத்தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தமது வட்டாரத்தில் கூட சென்றகிழமை கோழிக்கழிவுகளை இரவோடு இரவாக கொட்டிவிட்டுச் சென்றுள்ளனர். அவை 3 நாட்களாக அவ்விடத்தில் இருக்க பிரதேச மக்களுடன் தாமும் இணைந்து குறித்த கழிவினை அகற்றியதாகவும் பலர் வேறு பிரதேசசத்திலிருந்து கொண்டு வந்து இவ்வாறான செயல்களை மேற்கொள்கின்றனர். இனிவரும் காலத்தில் இவ்வாறான செயல்களை இடம்பெறாத வகையில் எதிர்கால சந்ததியினரை வினைத்திறனான சந்ததியினராக ஆக்க வேண்டிய கடமை எமக்குள்ளமையினால் குறித்த பிரேரணையினை சமர்ப்பித்ததாகத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் இதனை நாம் முன்பள்ளி தொடக்கம் பாடசாலை வரை கொண்டு செல்வது சிறப்பானது. இதனை சுகாதாரக்குழு முன்நின்று செயற்படுத்த வேண்டும் அதற்கான முழு ஒத்துழைப்பினையும் தாம் வழங்குவதாகவும் அத்தோடு நிற்காது 3 நிற கொள்கலன்களை (Dustbin) உக்கக்கூடியது, உக்க முடியாதது, கண்ணாடிக்கழிவு போன்றவற்றை தரம் பிரிப்பது தொடர்பாக அவர்களை பழக்கப்படுத்தினால் வரும் காலத்தில் அவர்கள் திறம்படச் செய்வார்கள். அதற்கமைவாக நாம் இதனை நாம் முன்கொண்டு செல்வோம் எனத்தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் இவ்விடயத்துடன் தாமும் செயலாளரும் கலந்தாலோசித்தமையானது இரு காவலாளிகளை சபைக்கு எடுத்து அவர்களை பொது இடங்களில் உதாரணமாக தொழில்நுட்பக்கல்லூரி அருகாமை மற்றும் கோண்டாவில் புகையிரத நிலையத்தருகில் தொடர்ந்து கழிவுகள் வீசுகின்றனர். அவ்வாறான இடங்களில் காவலாளிகளை கடமைக்கு அமர்த்தி அவர்கள் ஊடாக கண்காணிக்கும் நிலைப்பாட்டில் இருக்கின்றோம். அவை தொடர்பாகவும் அடுத்து கலந்துரையாட இருப்பதாகவும் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்களினால் இந்த தரம்பிரித்தல் கழிவுகளினாலே நேரடியாக தாம் பாதிக்கப்பட்டதாகவும் அதற்காக பல வருடங்கள் போராடி தற்போது தான் ஒரு 50% சீரமைப்பிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனாலும் எமது பிரதேசத்தில் எமது வீடுகளில் உள்ள கழிவுகளை நாம் தான் முகாமை செய்வது காலம் காலமாக வழமை. தமது பிரதேசத்திற்கு வாகனங்கள் வந்து அதற்கு குப்பைகள் வழங்குகின்றமை இல்லை. அவ்வாறான நிலையில் எமது வீடுகளுக்கு வரும் வீதிகளில் மூட்டையாக கழிவுகளை வீசிச்செல்கின்றனர். காரைக்கால் சிவன்கோயிலும் இந்து மயானமும் புனித பிரதேசங்கள். அண்மையில் காரைக்கால் இந்து மயானத்திற்குள்ளே கயத்துச்சுவாமிகள் சமாதிக்கு கும்பாவிசேகம் மற்றும் எண்ணெக்காப்பு என்பன சிறப்பாக நடைபெற்றன. ஆனால் தாம் இன்று வரும் போது அங்கே கோயில் வாசலுக்கு அருகில் குப்பை வீசப்பட்டிருக்கின்றது. அப்பிரதேசத்தை புனித பிரதேசமாக பிரகடனம் செய்து அங்கு அதனைக்குறிக்கும் பலகைகளை காட்சிப்படுத்த வேண்டும். மக்களுக்கான தெளிவூட்டல் பலகைகளை காட்சிப்படுத்தி இப்பிரதேசம் புனிதமான இடம். இதற்கான புனிதத்தை பேணுமாறு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தாம் பலமுறை கோரியதாகவும் அவை இன்றும் நடைமுறைக்கு வரவில்லை எனவும் அதனையும் தங்கள் கவனத்திற்கு தருவதுடன் வீதிகளில் குப்பை வீசுபவர்களை கண்காணிக்கும் பொறுப்பிற்கு இருவர் போதாது என தாம் நினைப்பதாகவும் மேலதிகமாக ஆட்கள் தேவை எனவும் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் அவ்வாறு குப்பைகளை வீசுபவர்கள் அடையாளப்படுத்தப்பட்டால் அதற்கு என்ன நடவடிக்கையினை செய்வது என்பதையத் கௌரவ தவிசாளர் அவர்கள் தீர்க்கமான நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என்பதுடன் முன்பள்ளிச் சிறார்கள் கழிவுகளை தரம்பிரித்து அவர்கள் குறித்த பொறிமுறைக்கு பழக்கப்பட்டார்கள் எனில் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக மாறுவார்கள். எனவே இவ்வாறு முன்பள்ளிகளில் சிறப்பாக செய்கின்ற மாணவர்களுக்கு ஏதாவது சந்தர்ப்பத்தில் பரிசில்கள் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தலாம் என்பதுடன் குறித்த விடயத்தை தாம் ஆமோதிப்பதாகத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் முன்பள்ளி ஊடாக பாடசாலை மட்டத்திற்கும் கொண்டு செல்ல வேண்டும். பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வாக பயிற்சி ஒன்றை வழங்கலாம். அதேமாதிரி கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் குறிப்பிட்டதை போல காரைக்கால் சிவன் கோயில் பகுதி புனித இடமாக ஏற்கனவே பிரகடனப்படுத்தியிருக்கின்றோம். ஆனால் அதில் மக்கள் ஒத்துழைப்பையும் இவ்விடத்தில் வேண்டிநிற்கின்றேன் எனவும் இரண்டு மூன்று தடவைகள் தாமே குறித்த இடத்திற்குசென்றுள்ளேன். முதலில் எமது ஊழியர்கள் குறித்த இடத்தை துப்பரவு செய்து விட்டுச்சென்ற ஒரு மணி நேரத்திற்குள்ளாக மீண்டும் குறித்த இடத்தில் குப்பைகள் வீசப்படுகின்றன. இதில் மக்களும்

விழிப்பணர்வுடன் இருக்க வேண்டும் என்பதுடன் இதில் ஊடகவியலாளர்களை கேட்டுக்கொள்வது இவை மக்களுக்கு சென்றடைவதுடன் அது மக்களுக்கு விழிப்புணர்வாக சென்றடைய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களது பிரேரணையானது காலத்தின் தேவைக்கானது. கடந்த காலத்தை விட இன்று முன்னேற்றமான கட்டத்தை எமது சபை அடைந்து கொண்டிருக்கின்றது. எங்கு பார்த்தாலும் குப்பைகள் இருக்கக்கூடிய இடம் தற்போது மக்களின் ஆதரவைப்பெற்ற குப்பை அகற்றல் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுவதாக பலராலும் பேசப்படும் அளவிற்கு இன்று குப்பை அகற்றலிலே பிரதேசசபை சிறிது முன்னிற்கின்றது என்பதனை அனைவரும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அதனடிப்படையில் சிறார்களில் இருந்தே கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் முன்பு கொண்டு வந்திருந்தார். தற்போது கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் சிறார்களிலிருந்து பாடசாலை மட்டத்திற்கும் விஸ்தரிக்க வேண்டும் என பிரேரணை கொண்டு வந்திருந்தார். அந்தவகையில் இவை பாடசாலைகள் மட்டத்தில் பாடசாலைகளுக்கான ஒரு ஒழுங்குபடுத்தலில் அவர்களுடன் நாமும் கைகோர்த்து விடயங்களைச் செய்யலாம். சில பாடசாலைகளில் ஒருபுறம் குப்பையாக இருக்கின்றது. ஒருபுறம் பாடசாலை நடைபெறுகின்றது. அங்கு ஒரு விழா நடைபெறும் போது குறித்த குப்பைகள் அவசரமாக அகற்றப்படுகின்றன. இது மாற்றப்பட வேண்டும். எந்த நாளுமே அந்த பாடசாலை தூய்மையாக இருக்க வேண்டும். அப்பிள்ளைகள் அதனைப் பழகும் வண்ணம் எமது திட்டத்தினூடாக எமது சபைக்குட்பட்ட அனைத்து பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களும் ஒரு சுகாதாரத்தை பேணும் போது அவை வீடுவரை அவர்களை கொண்டு நடத்தக்கூடியதான ஒரு உத்வேகத்தை அவர்களுக்கு அளிக்கும். எமது சபை எமது ஊர் என்ற பற்றுதலுடன் கொண்டுவரக்கூடிய அளவிற்கு கல்வி சமூகத்திலிருந்து கொண்டுவரும் போது அவை எமக்கு பெருவெற்றியைத் தரக்கூடியதாக இருக்கும். உண்மையில் பாடசாலைகள் மட்டத்தில் இந்த தரம் பிரித்தலை ஒரு நிகழ்வாக செயற்படுத்தலாம். கடந்த காலத்தில் கொரோனா தொற்று காரணமாக சில வேலைத்திட்டங்கள் தாமதமடைந்தன. இன்று ஓரளவிற்கு முன்கொண்டு செல்லக்கூடிய இருக்கின்றது. எங்களால் முடிந்த சுகாதாரக்குழுவும் கௌரவ தவிசாளர் கேட்டுக் கொண்டதைப்போன்று ஏனைய குழுக்களும் தமது சிபார்சுகளை ஒவ்வொரு மாதாந்த கூட்டத்திலும் வழங்கும் போது சபை நடவடிக்கைகள் மக்களுக்கு வினைத்திறனான செயற்பாடாக அமையும் என்பதனை வலியுறுத்தி இந்த தரம் பிரித்தல் செயற்பாட்டிற்கு கௌரவ உறுப்பினர் கொண்டு வந்த பிரேரணையினை தாம் முன்மொழிவதாகத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் ஏற்கனவே முன்பள்ளிகளில் இச்செயற்பாடானது மேற்கௌள்ளப்பட்டாலும் பாடசாலைகளுக்கு கொண்டு செல்லும் போது வளவாளர்கள் ஊடாக எமது பிரதேசசபைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இந்த விழிப்புணர்வினை வழங்கி குறித்த செயற்பாட்டினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக சுகாதாரக்குழு தலைமையில் கிழமையில் இரு பாடசாலைகளுக்கு களவிஜயம் மேற்கொண்டாலே சிறப்பாக அமையும் எனக்குறிப்பிட்டதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/07**

கௌரவ உறுப்பினர் திரு தெ.கிரிதரன் அவர்களது திண்மக் கழிவகற்றலை முன்பள்ளி முதல் பாடசாலை வரை எமது எதிர்கால சந்ததியினரை வினைத்திறனானவர்களாக உருவாக்குதல் எனும் பிரேரணைக்கு அமைவாக சபை நிதியில் இருந்து சிறப்பாக தரம் பிரித்து கழிவுகள் அகற்றுவதற்கு 3 நிற கூடைகள் முன்பள்ளி தொடக்கம் பாடசாலை வரை வளவாளர்களை இனம் கண்டு வழங்குவதெனவும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக சுகாதாரக்குழு தலைமையில் ஒரு கிழமைக்கு இரு பாடசாலைகளை சென்று பார்வையிடுவதெனவும் கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/08**

கழிவுகள் அதிகளவில் வீசப்படும் கோண்டாவில் புகையிரதநிலையம் மற்றும் தொழில் நுட்பக்கல்லூரி போன்ற பொது இடங்களில் கழிவுகள் கொட்டுவதனை கண்காணிப்பதற்கு ஏதுவாக தற்போது

சேவையினைப் பெற்றுள்ள சந்திரா பாதுகாப்பு சேவை நிறுவனத்திடமிருந்து இரு காவலாளிகளை மேலதிகமாக பெற்றுக்கொள்வதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து உபகுழுக்களின் சிபார்சுகள் சபை அனுமதி கோரில். உபகுழு சிபார்சுகளில் முதலாவது நிதிக்குழு 31.01.2022ஆம் திகதிய சிபார்சுகள் மற்றும் 10.02.2022 ஆம் திகதிய நிதிக்குழு சிபார்சுகள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபையின் அனுமதி கோரியதை தொடர்ந்து குறித்த சிபார்சுகள் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**தீர்மானம் 11.02.2022/09**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக 4ம் வட்டாரத்திற்கான தார்வீதி புனரமைப்பிற்கான 1ம் பகுதிக்கொடுப்பனவு (வற் உட்பட) ரூபா 496,688.60 ஐ சில்லறைக்கடன் ஒதுக்கத்தில் இருந்து Nation Builders க்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/10**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக 4ம், 5ம், 6ம், 7ம் வட்டாரங்களுக்கான மீள்தாரிடல் வேலைக்கான 1ம் பகுதிக்கொடுப்பனவு (வற் உட்பட) ரூபா 1,195,245.90.90 ஐ சில்லறைக்கடன் ஒதுக்கத்தில் இருந்து Tharani civil Engineers க்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/11**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக சபையினால் பராமரிக்கப்படுகின்ற கொக்குவில் அம்மன் வீதி மற்றும் ஆடியபாதம் வீதியில் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு முன்பாகவுள்ள வடிகால்கள் மீது குப்பைகள் வீசப்படுகின்றது. இதனால் சூழல் மாசடைவதுடன் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதினை கருத்தில் கொண்டு பாதுகாப்பு வேலிகள் அமைப்பதற்கும் இதற்கான நிதியினை வடிகால் துப்பரவு செய்யும் ஒதுக்கீட்டின் ஊடாக செய்வதற்கும் சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/12**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக திருநெல்வேலி, சித்துப்பாத்தி, காரைக்கால் மயானங்களுக்கான புனரைமைப்பு வேலைகளுக்கான 1வது பகுதிக்கொடுப்பனவு ரூபா 411,987.35 வை Creative construction ற்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/13**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக Supplying and fixing wall cbinat at head office வேலைக்கான இறுதிக் கொடுப்பனவு ரூபா 1,394,048.00 it S.T.S. Civil Engineer ற்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/14**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக கொக்குவில், கட்டையாலடி, கொட்டைக்காடு மயான வேலைக்கான 1வது பகுதிக் கொடுப்பனவு ரூபா 517,578.00 it Tree construction ற்கு வழங்குவதற்கு சபை அனுமதி

வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/15**

நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக Re- Tarring word -01, ward – 02, ward 03 வேலைகளுக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 1,800,817.70 Sakthy Engneering வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/16**

நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக Re- Tarring word -04, ward – 05, ward 06 வேலைகளுக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 74,009.20 Tharani Engneering வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/17**

நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக LDSP திட்டத்தில் கொக்குவில் சந்தையில் 2ம் கட்டத்திற்கான கட்டட வேலைக்கான 2வது பகுதி கொடுப்பனவு ரூபா 1,500,229.94 வை Mapil civil Engneering வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/18**

நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக Macadam Road (ward- 05) வேலைக்கான 1வது பகுதி கொடுப்பனவு ரூபா 1,780,143.26 வை Nation construction ற்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/19**

நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக அபிவிருத்தி ஒதுக்க 54,311,265.23 மில்லியன் ரூபாவில் இருபாலை வீதியில் MS Lane தொடக்கம் புகையிரத கடவை வரையான வாய்க்கால் அமைத்தல் 20Mn, தலையாழி வாய்க்கால் , பழைய தபாற்கந்தோர் வீதி புனரமைப்பு – 5 Mn, கொக்குவில் உப அலுவலகப் புனரமைப்பு கட்டம் 1 – 28.5Mn, LDSP வேலைத்திட்டம் - 811,266.23 ஆகிய வேலைகளை மேற்கொள்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்,

**தீர்மானம் 11.02.2022/20**

நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக வீதிகளில் அகழப்பட்ட மண் பகீரங்க ஏல விற்பனைக்கு 1 உழவியந்திர பெட்டி ரூபா 1726/= இ ஒரு டிப்பர் ரூபா 6900/= ற்கும் ஏலம் கோருவதென கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/21**

நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக அலுவலக செயற்பாடுகளை (பெயர்மாற்றம், சோலைவரி, கட்டட விண்ணப்பங்கள்) Online ஆக மாற்றுவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/22**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக கொக்குவில் அம்மன் வீதி மற்றும் ஆடியபாதம் வீதியில் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு முன்பாகவுள்ள வடிகால் ஆகியவற்றுக்கு பாதுபாப்பு கம்பி வேலி அமைத்தல் வேலையினை கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்திற்கு வழங்குவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.�்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/23**
கடந்த 11.01.2022/38 தீர்மானத்திற்கு அமைவாகவும், நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாகவும் கொக்குவில் பொற்பதி சனசமூகநிலையத்தினூடாக வெளிவாரி அடிப்படையில் 25 தொழிலாளர்களை 2022ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் பெற்றுக்கொள்வதெனவும் ஒரு தொழிலாளிக்கு நாளாந்தம் 8 மணித்தியால சேவைக்கான கொடுப்பனவு ரூபா 1068.00 வீதம் வழங்குவதாகவும் ஒப்பந்தம் மேற்கொள்வதென சபையால் தீர்மானிக்கப்பட்டு தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/24**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக LDSP செயற்பாட்டு நிதி கட்டம் 2 ற்கான கீழ்வரும் வேலைகளுக்கு சபையால் தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
கொக்குவில் நூலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளுடன் கூடிய பொது மலசலகூடம் அமைத்தல் - 1.2Mn
கொள்கலம் புனரமைப்பு - 0.5 மில்லியன்
சபை எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு வீதிப்பெயர்ப்பலகை பொருத்துதல் - 1.3 மில்லியன்.

**தீர்மானம் 11.02.2022/25**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக LDSP செயற்பாட்டு நிதி கட்டம் 1 ற்கான காரைமுனங்கு மயானத்தில் கொங்கிறீற்றிலான தகன நிலையம் அமைத்தலும் வசதிகளை விருத்தி செய்தலும் வேலையினை பகீரங்க கேள்வி அறிவித்தல் விளம்பர மூலமாகவும் ஏனைய கீழ்வரும் வேலைகள் கடைகொள்ளல் (Shopping) முறையில் வழங்குவதற்கும் மேலதிக நிதி 1மில்லியன் ரூபாவினை சபை நிதி மூலம் மேற்கொள்வதெனவும் கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1. புதுப்பிக்கத்தக்க சக்தி பொருத்துதல் (சூரிய மின்கலம்)
2. மாற்றுத்திறனாளிகள் அணுகும் வசதி – கோண்டாவில், கொக்குவில் பொது நூலகங்கள், கொக்குவில் ஆயுள்வேதம், நல்லூர் உப அலுவலகம்
3. இயங்காத வாராந்த சந்தை கட்டடத்தை சனசமூகநிலைய கட்டடமாக மாற்றுப் பயன்பாட்டுக்காக அபிவிருத்தி செய்தல்.
4. தலைமை அலுவலகத்தில் ஒரு பகுதியினை Covid – 19 தடுப்பு ஏற்பாட்டுடன் பொதுமக்கள் சேவை பெறும் கருமபீடமாக மாற்றி அமைத்தல்.
5. மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்தியேக நூலகப்பிரிவு அமைத்தல்

**தீர்மானம் 11.02.2022/26**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக, 2021ஆம் ஆண்டுக்கான கணிப்பீட்டுச்சபை அறிக்கையினை சபை அங்கீகரிப்பதுடன் 2ம் கணிப்பீட்டுச்சபை உறுப்பினராக கௌரவ உறுப்பினர் திரு.சு.வியஜகுமாரன் அவர்களை தெரிவுசெய்வதென கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/27**
நிதிக்குழு சிபார்சுக்கு அமைவாக கீழ்வரும் பராமரிப்பு வேலைகள் கடைகொள்ளல் (shopping) முறையில் வழங்குவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- வட்டார ரீதியான வேலைகள் (வட்டாரம் 8,9,10) – Stage 1

01. பாற்பண்ணை கிணறு திருத்தம்
02. சபை ஆதனத்திற்கான எல்லை மதில் அமைத்தல் (பாற்பண்ணை)
03. துவிச்சக்கரவண்டி தரிப்பிடபாதுகாப்பு வலை அமைத்தல் (பாற்பண்ணை)
04. வடிகால்கள் concrete slop அமைத்தல் (அம்மன் வீதி)
05. Calvert இற்கான வலை அமைத்தல் - கல்வியன்காடு
06. ஆட்டிறைச்சிக்கடை திருத்தம் - திருநெல்வேலி சந்தை
07. திருநெல்வெலி சந்தைக்கான பாதுகாப்பு வலை அமைத்தல்

- .வட்டார ரீதியான வேலைகள் ( வட்டாரம் 8, 9) Stage 11

1. நல்லூர் உப அலுவலக பாதுகாப்பு புசடைட அமைத்தல்
2. திருநெல்வேலி சந்தை கூரை வேலை (தேனு களஞ்சியம்),
3. திருநெல்வேலி சந்தை வர்ணப்பூச்சு வேலை
4. Market Repair works
5. Satty grill work Sub office Nallur

உப குழுக்களின் சிபார்சுகளில் அடுத்து பெண்கள் மற்றும் சிறுவர் குழு சிபார்சுகள் காட்சிப்படுத்தப்பட்டு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு திர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/28**
பெண்கள் மற்றும் சிறுவர் குழு சிபார்சுக்கமைவாக சாதனை மங்கையர்களில் 25 பெண்மணிகளை கீழ்வரும் துறை சார்பாக கௌரவிப்பதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
கல்வித்துறையில் சாதனையாளர் - 05
சுயதொழில்முயற்சியில் சாதனையாளர் - 05
விளையாட்டு துறையில் சாதனையாளர் - 05
கலை இலக்கியத்துறை சாதனையாளர் - 05
சமூகசேவைதுறையில் சாதனையாளர் - 05

**தீர்மானம் 11.02.2022/29**
பெண்கள் மற்றும் சிறுவர் குழு சிபார்சுக்கமைவாக குறித்த சாதனை மங்கையர்களின் விபரங்களை பிரதேசசெயலகத்திடம் கோருவதெனவும், பிரதம விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் (பெண்கள்) அழைத்து கௌரவிப்பதெனவும் கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/30**
பெண்கள் மற்றும் சிறுவர் குழு சிபார்சுக்கமைவாக மகளிர் தினத்திற்கான கீழ்வரும் நிகழ்ச்சி நிரலினை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரல்

- அருகிலுள்ள ஆலயத்திலிருந்து அழைத்து வரல்
- வரவேற்பு நடனம்
- மங்கள விளக்கேற்றல்

- தலைமை உரை
- ஆசியுரை
- நடன நிகழ்வு
- அபிநய நடனம் - (பெண்களுக்கெதிரான வன்முறை)
- பட்டிமன்றம்
- சாதனை மங்கையர்களில் 25 பெண்மணிகளை கௌரவித்தல்
- நன்றியுரை

நிகழ்ச்சி நிரலில் 05வது விடயம் ஜனவரி மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை அங்கீகரித்தல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/31**

ஜனவரி மாதம் கீழ்வரும் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை சபையால் அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 06வது விடயம் ஜனவரி மாதத்திற்கான கொடுப்பனவுகளுக்கு தழுவு அனுமதி பெறல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/32**

ஜனவரி மாதத்திற்கான கொடுப்பனவுகளுக்கு தழுவு அனுமதி வழங்குவதாக என கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| V.NO | Date | Cash Book 162-1001-00000-920<br>Details - January 2021 | | Cash | XE |
|---|---|---|---|---|---|
| G/1 | 10 | யுனைட்டட் மோட்டோஸ் லங்கா | வாகன திருத்தம் | 31,914.69 | |
| | | | | 31,914.69 | - |
| G/2 | 13 | பி முருகையா | திண்மக் கழிவு உர விற்பனை மேலதிக வைப்பு மீளளிப்பு | 9,000.00 | |
| G/3 | | கே ஜெயபிரசாந் | வாகன வாடகை | 141,775.00 | - |
| | | | | 150,775.00 | - |
| | | | | 31,914.69 | - |
| | | | | 182,689.69 | - |
| G/4 | 20 | மாபிள் சிவில் கென்ஸ்ரக்சன் | LDSP 2ம் பகுதி கொடுப்பனவு | 798,448.01 | 88,716.44 |
| G/5 | | சதீசன் | மைதான வலை | 40,000.00 | |
| G/6 | | சக்தி இஞ்சினியரிங் | பிடாரியம்மன் வெள்ள வாய்க்கால் | 2,324,996.43 | 121,412.25 |
| | | | | 3,163,444.44 | 210,128.69 |
| | | | | 182,689.69 | - |
| | | | | 3,346,134.13 | 210,128.69 |
| G/7 | 21 | சந்திரா பாதுகாப்பு சேவை | பாதுகாப்புக் கட்டணம் | 135,728.00 | |
| G/8 | | ஜ7 கொம்பியூட்டஸ் | பிறிண்டர்ஸ் கொள்வனவு | 223,470.00 | |
| G/9 | | ஜ7 கொம்பியூட்டஸ் | யுபிஎஸ் கொள்வனவு | 64,790.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/10 | | ஐ7 கொம்பியூட்டஸ் | மொனிட்டர் கொள்வனவு | 45,100.00 | |
| | | | | 469,088.00 | - |
| | | | | 3,346,134.13 | 210,128.69 |
| | | | | 3,815,222.13 | 210,128.69 |
| G/11 | 24 | எஸ் நவநீதன் | கடை கேள்வி வைப்பு | 40,500.00 | |
| | | | | 40,500.00 | - |
| | | | | 3,815,222.13 | 210,128.69 |
| | | | | 3,855,722.13 | 210,128.69 |
| G/12 | 31 | க.அபிராமி | இடர்கடன் | 250,000.00 | |
| G/13 | | கு.விபிந்தன் | இடர்கடன் | 166,286.50 | 83,713.50 |
| G/14 | | என் ஜீவிதன் | இடர்கடன் | 166,047.55 | 83,952.45 |
| G/15 | | அ.சுயந்தன் | பென்ரைவ் கொள்வனவு | 2,400.00 | |
| G/16 | | வலம்புரி | கடை வாடகை விளம்பரம் | 22,500.00 | |
| G/17 | | பி விசாகன் | பத்திரிகை | 7,600.00 | |
| G/18 | | அனித்தா பாலசுந்தரம் மற்றும் ஏனையோர் | பல்லைக்கழக நன்கொடை புலமைப்பரிசில் | 245,000.00 | |
| G/19 | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 2,362.80 | |
| G/20 | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 4,028.10 | |
| G/21 | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 1,136.70 | |
| G/22 | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 5,565.30 | |
| G/23 | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 10,362.55 | |
| G/24 | | ந சுமதி | மேலதிக நேரம் | 4,912.20 | |
| G/25 | | எஸ் பிரதாபன் | மேலதிக நேரம் | 3,682.13 | |
| G/26 | | ஜே ஜசிந்தா | மேலதிக நேரம் | 3,938.66 | |
| G/27 | | கே சேனாதிராசா | மயானக் கொடுப்பனவு | 1,200.00 | |
| G/28 | | எஸ் நடேசு | மயானக் கொடுப்பனவு | 400.00 | |
| G/29 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 16,875.00 | |
| G/30 | | செயலாளர் பி ச நல்லூர் | சில்லறைக் காசேட்டு முற்பணம் | 10,000.00 | |
| G/31 | | கணக்காய்வு அதிபதி | கணக்காய்வுக் கட்டணம் | 76,800.00 | |
| | | | | 1,001,097.49 | 167,665.95 |
| | | | | 3,855,722.13 | 210,128.69 |
| | | | | 4,856,819.62 | 377,794.64 |

**Cash Book 1095945 -January 2022**

| V.No | Date | Details | Cash | XE |
|---|---|---|---|---|
| SA/1 | 21 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 5,184,823.32 | |
| | | செயலாளர் கணக்காளர் ஒய்வூதியத் திணைக்களம் | 241,129.25 | |
| | | தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 26,675.00 | |
| | | சிலிங்கோ இன்சுரன்ஸ் | 3,738.00 | |
| | | எச் என் பி அசுரன்ஸ் | 2,171.00 | |
| | | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் | 5,770.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 552,849.49 | 3,075.00 |
| | | | 6,017,156.06 | 3,075.00 |
| SA/3 | 29 | முகாமையாளர், இலங்கை வங்கி | 148,640.00 | |
| | | முகாமையாளர்,கொமர்சியல் வங்கி | 97,750.00 | |
| | | முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி | 14,780.00 | |
| | | முகாமையாளர்,தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலி | 13,750.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முகாமையாளர் மக்கள் வங்கி திருநெல்வேலி | 14,000.00 | |
| | | நலன்புரிச்சங்கம் ந பி ச | 4,230.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 14,850.00 | |
| | | ஐக்கிய தேசியக் கட்சி | 1,000.00 | |
| | | இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 4,000.00 | |
| | | தமிழ் தேசிய மக்கள் முன்னணி | 2,000.00 | |
| | | | **315,000.00** | **-** |
| | | | **6,017,156.06** | **3,075.00** |
| | | | **6,332,156.06** | **3,075.00** |

## Cash Book 6954633 -January 2022

| S.No | Date | Details | | Cash | XE |
|---|---|---|---|---|---|
| EN/1 | 29 | முருகையா | பசளை வைப்பு மீளளிப்பு | 4,200.00 | 4,800.00 |
| | | | | **4,200.00** | **4,800.00** |
| | | | | | |

நிகழ்ச்சி நிரலில் 07வது விடயம் ஜனவரி மாத வருமான செலவு அறிக்கையினை சபை அங்கீகாரம் பெறல். குறித்த விடயம் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபை அனுமதியை கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/33**
ஜனவரி மாத வருமான செலவு அறிக்கையினை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 08வது விடயம் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானசபை தொடர்பானது. ஏற்கனவே அரியாலை சித்துப்பாத்தியில் இருக்கின்ற நிர்வாகசபை கலைக்கப்பட்டு இன்றுவரை அதற்கான புதிய நிர்வாக சபை சென்ற வருடம் கோவிட் - 19 காரணமாக முன்னாயத்தங்கள் எவையும் மேற்கொள்ள முடியவில்லை. தற்சமயம் ஊர் மக்களால் நிர்வாகசபையினை தெரிவு செய்து அதன் அறிக்கை உட்பட அனைத்து ஆவணங்களும் இங்கு சமர்ப்பித்துள்ளனர். அதன்போது சபையின் ஒப்புதலுடன் தான் அங்கீகரிப்பதா அல்லது மீண்டும் நடாத்துவதா என்ற தீர்மானத்திற்கு வருவேன் என்றும் அவர்களுக்கு கூறியிருந்தேன். அதற்கமைவாக சித்துப்பாத்தி இந்துமயான புதிய நிர்வாக சபையினை ஏற்பதா அல்லது புதிதாக தெரிவு செய்வதா என சபையின் அனுமதியினைக் கோரினார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.அ.அகிலாண்டரூபி அவர்களினால் குறித்த நிர்வாக சபையின் உறுப்பினர் யார் தலைவர் யார் செயலாளர் என கௌரவ தவிசாளரை வினாவிய போது கௌரவ தவிசாளர் அவர்களினால் வட்டார உறுப்பினராக இருக்கின்ற உங்களுக்கு தெரியாதா எனக்கேட்டார். அதன்போது தமக்கு குறித்த பொதுச்சபைக்கூட்டம் நடைபெற்றமை தெரியாது எனத் தெரிவித்தார். அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்களும் தமக்கு தெரியாது அறிவிக்கப்படவில்லை. குறித்த பொதுக்கூட்டத்திற்கு வட்டார உறுப்பினர் என்ற வகையில் தங்களை அழைத்திருக்க வேண்டும். அல்லது ஏதோ ஒருவகையில் தெரியப்படுத்தியிருக்க வேண்டும். ஆகவே புதிதாக நிர்வாக சபையினைக் கூட்டுமாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டது. அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் ஏற்கனவே பிரச்சனைக்குட்பட்ட மயானம் ஆகையினால் குறித்த மயானத்தை பயன்படுத்தும் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் அறிவுறுத்தல் சபையினால் வழங்கப்பட்டு பிரதேசசபையின் தலைமையில் அக்கூட்டம் நடாத்தப்பட்டு அதற்கான நிர்வாகம் தெரிவுசெய்யப்பட வேண்டும். அதனை ஒரிருவர் தன்னிச்சையாக முடிவெடுத்து பொருத்தமற்றது. கௌரவ சபையின் கௌரவம்அங்கு தங்கியிருக்கின்றது. சபையால் நிறுத்தப்பட்ட மயானசபைக்கு புதிதாக ஒரு நிர்வாக

சபையினை உருவாக்குவதற்கு சபைக்குத் தான் பொறுப்புள்ளது எனத்தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/34**
அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானசபையானது கௌரவ சபையால் கலைக்கப்பட்டுள்ளமையால் குறித்த மயானத்தை பயன்படுத்தும் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் அறிவுறுத்தல் சபையினால் வழங்கப்பட்டு பிரதேசசபையின் தலைமையில் நடைபெறவேண்டுமென கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.அ.அகிலாண்டரூபி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 09வது விடயம் ஏனையவை. ஏனையவை விடயத்தில் மார்ச் மாதம் கீழ்வரும் உத்தியோகத்தருக்கு இடர்கடன் வழங்குவதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/35**
மார்ச் மாதம் கீழ்வரும் உத்தியோகத்தருக்கு இடர்கடன் வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- திரு.தி. மலர்வேந்தன் - 250,000.00

ஏனைய விடயத்தில் அடுத்து அரசஅதிபர் அவர்களினால் அனுப்பப்பட்ட கடிதம் சபைக்கு வழங்கப்பட்டு கௌரவ தவிசாளர் அவர்களினால் விடயம் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு தெரிவிக்கும் போது 2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் பிரதேச அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்கும் ஒதுக்கப்பட்ட 3 மில்லியன் நிதிக்காக திட்ட முன்மொழிவுகள் கிராமத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு அதற்கான ஒருபகுதி நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த நிதி காலாண்டு அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளதால் அக்காலாண்டிலேயே நிறைவு செய்ய வேண்டும் எனத்தெரிவித்து குறித்த திட்டமுன்மொழிவுகள் இணைக்கப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீடுகளை தயாரித்து வழங்குமாறு தெரிவித்து பிரதேசசெயலர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கான வேலைத்திட்டங்கள் தான் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான சபை அனுமதியினைக் கோரினார். குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்ட போது கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் தமது வட்டார GS பிரிவு உள்வாங்கப்படவில்லை எனத் தெரிவித்தார். அதன்போது குறித்த விடயம் ஆராயப்பட்டு இவ்விடயம் தொடர்பாக பிரதேசசெயலருக்கு கடிதம் வழங்குவோம்

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் மத்திய அரசாங்கத்தால் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளுக்கு திட்டமுன்மொழிவுகள் கிடைப்பதை வரவேற்கின்றோம். முன்னைய காலத்தில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டமானது பிரதேசசபை தவிசாளர் தலைமையிலேயே திட்டங்கள் வகைப்படுத்தப்படும். பிரதேசசபை தவிசாளர் தலைமையில் தான் பிரதேச அபிவிருத்தி கூட்டங்கள் கூட்டப்பட்டு அபிவிருத்திகள் மேறக்கொள்ளப்பட்டன. இப்போது பிரதேசசெயலகத்திற்கு மாற்றப்பட்டு நாம் ஒரு பார்வையாளராக இருக்கும் படி இருக்கின்றது. இதனை சுட்டிக்காட்டுவதன் நோக்கம் குறித்த ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திற்கு 5 நிமிடத்திற்கு முன்னர் தான் எமக்கு அழைப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட வட்டார உறுப்பினர்களை புறக்கணிப்பதாக இருக்கின்றது. மக்களுக்கான தேவைகள் தொடர்பாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியான உறுப்பினர் இருக்கும் போது கிராம அலுவலரா அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தரா முடிவெடுப்பது எனக் கேட்டார். அவர் மேலும் கூறுகையில் தமது வட்டாரத்தில் நடைபெற்ற விடயங்களை சபைக்கு தெரிவித்ததுடன் இவ்விடயங்கள் தொடர்பாக பிரதேசசெயலருக்கு சுட்டிக்காட்டி பிரதேசசெயலகத்தால் மேற்க்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக முன்கூட்டியே அறிவிக்குமாறு கௌரவ சபையுடன் ஒன்றிணைந்து செயற்படுமாறு தெரிவிக்குமாறு தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் எமது சபைக்குட்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளும் போது அதனை முற்கூட்டி அறியத்தந்து பிரதேசசபையுடன் ஒன்றிணைந்து

செயற்படுமாறு அனைத்து திணைக்களங்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை மீண்டும் வலியுறுத்தி அதிமேதகு ஜனாதிபதி மட்டத்திற்கு கொண்டு செல்வோம். அதற்கான கடிதம் அனுப்புவோம் எனத்தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கருத்து தெரிவிக்கையில் ஒருங்கிணைப்பு குழு தலைவருக்கு நேரடியாக விவசாயக்கிணறுகள் தொடர்பான விபரங்கள் தம்மால் வழங்கப்பட்ட போதிலும் குறித்த செயற்றிட்ட ஆரம்ப அடிக்கல் நாட்டும் நிகழ்வினை தமக்கு தெரியப்படுத்தவில்லை. குறித்த செயற்பாட்டை அவமரியாதை செய்யும் செயற்பாடாகவே கருதுவதாகவும் அதேபோன்று முன்னைய தவிசாளர் காலத்தில் கம்பரிலியா திட்டத்திலும் இதேமாதிரி அவமரியாதை நடைபெற்றது எனத் தெரிவித்து குறித்த சம்பவத்தினை சபைக்குத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் பிரதேசசபையினை ஓரங்கட்ட முடியாது எனவும் அவர்கள் வேலைத்திட்டங்களுக்கு பரிபூரண ஆதரவினை வழங்குவோம். ஆனால் அவற்றினை முற்கூட்டி எமக்கு தெரியப்படுத்தி தகுந்த கால அவகாசத்துடன் செய்யப்பட வேண்டும் என தெரியப்படுத்தி அதிமேதகு ஜனாதிபதி வரை கடிதம் அனுப்புவோம் எனத் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டது. அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்களினால் எமது சபைக்குரிய வேலைகளே இங்கு அனுப்பப்பட்டுள்ளது. எமது சபைக்குட்பட்ட ஏனைய திணைக்களம் சார்ந்த விடயங்கள் அந்தந்த திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும். அவை தொடர்பான சிபார்சுகள் எமக்கு வராது எனத்தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/36**

பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்படவுள்ள 3 மில்லியன் வேலைத்திட்ட வேலைகளை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து Seald Pit ஆன மலசலகூடம் 25அடி தூரத்தில் அமைப்பதற்கு சபை அனுமதி. ஏற்கனவே 60அடி தூரத்தில் சாதாரண மலகூடத்திற்கும் 35அடி தூரத்தில் Seald Pit அமைப்பதற்கும் சபையால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தற்போது நல்லூர் பகுதிகளில் 3/4 பரப்பில் வீடு கட்டுவதனால் Seald Pit கட்டுவதற்கு இடப்பற்றாக்குறை காரணமாக மக்கள் சிரமப்படுகின்றனர். இதனை சபையில் விசேடமாக 25 அடியில் அமைப்பதற்கும், அவ்வாறு அமைக்கும் போது கிரமமாக அவர்களே அகற்றி அதனை காட்சிப்படுத்த வேண்டும். அதற்கான முழுப்பொறுப்பும் குறித்த ஆதன உரிமையாளரை சாரும் என்ற தீர்மானத்தை எடுப்பதற்கு சபையிடம் அனுமதி கோரினார். அவ்வாறு கௌரவ தவிசாளர் அனுமதி கோரும் போது மாநகரசபையும் 25அடி தூரத்தில் Seald Pit அமைப்பதற்கு அனுமதி வழங்குகின்றது எனவும் தெரிவத்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் இவ்விடயம் சுகாதாரம் தொடர்பானது எனவும், சிலர் Seald Pit அமைத்து விட்டு பின்னர் அதனை அகற்றி விடுகின்றனர். இதற்கு ஒரு இறுக்கமான நடைமுறையினை பின்பற்ற வேண்டும் எனத்தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் விரிவாக சபையில் ஆராயப்பட்டது. அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் மலக்கழிவு அகற்றுவதனை உறுத்திப்படுத்தல் மற்றும் அவற்றால் ஏற்படும் சுகாதார பிரச்சனைகளுக்கு அவர்களே பொறுப்பு எனக்குறிப்பிட்டு உத்தரவாதக்கடிதம் பெற்றுக்கொண்டு அனுமதியினை வழங்கலாம் எனத்தெரிவித்ததை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/37**

சபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் மாற்று இடவசதி இல்லையென அடையாளம் காணப்படும் ஆதனங்களில் Seald Pit ஆன மலசலகூடம் மாத்திரம் அமைக்க அனுமதி வழங்குவதெனவும் இதன் போது நீர் மூலத்திற்கும் மலக்கூடக் குழிக்கும் இடையேயான தூரம் 25 அடியில் அமைப்பது போதுமானது எனக் கருதி அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து உள்ளூராட்சி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக எழில்மிகு கிராமம் வளமான வாழ்வு எனும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கருத்திட்டத்திற்கு அமைவாக ஆடியபாதம் வீதி தூய்மையாக்கல் மற்றும் போக்குவரத்து இடையூறுகளை அகற்றுதல் செயற்றிட்டம் எதிர்வரும் 18, 19, 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. குறித்த நிகழ்வில் அனைத்து கௌரவ உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு சபையினரைக் கேட்டுக்கொண்டார்.

ஏனைய விடயத்தில் அடுத்து வட்டாரம் 15, திருச்செல்வம் வீதியில் முறைப்பாட்டாளர் குறித்த வீதி 12அடி பாதை. தற்போது 6அடி பாதையாக மாற்றப்பட்டுள்ளது எனத் முறைப்பாடு கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் நேரடியாக சென்று பார்வையிட்ட போது இலக்கம் 29 ஆதனத்தில் அனுமதியற்ற முறையில் 6அடி பாதையினை எடுத்து மதில் அமைக்கப்பட்ட போது எம்மால் குறித்த கட்டட அமைப்பினை நிறுத்தி அனுமதி பெற்று தொடருமாறு 3 கடிதம் அனுப்பப்பட்டு பின்னர் சிவப்பு நோட்டீசும் ஒட்டப்பட்டுள்ளது. ஆனால் குறித்த உரிமையாளர் எம்முடன் எதுவித தொடர்பும் கொள்ளவில்லை. எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வெளிநாட்டில் வசிப்பதனால் முறைப்படி அனுமதி பெறுவதற்கான அறிவித்தல் பத்திரிகை ஊடாக பிரசுரிப்பதற்கும் தவறும் பட்சத்தில் சட்ட விரோத மதில் அமைப்பினை இடித்தழிப்பதற்கு சபையின் அனுமதியினைக் கோரினார். அதனைத்தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/38**
வட்டாரம் 15, திருச்செல்வம் வீதியில் இலக்கம் 29 ஆதனத்தில் அனுமதியற்ற முறையில் அமைக்கப்பட்ட மதில் அமைப்பு தொடர்பாக உரிமையாளர் வெளிநாட்டில் வசிப்பதனால் முறைப்படி அனுமதி பெறுவதற்கான அறிவித்தல் பத்திரிகை ஊடாக பிரசுரிப்பதற்கும் தவறும் பட்சத்தில் சட்ட விரோத மதில் அமைப்பினை இடித்தழிப்பதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து காரைமுனங்கு மயானத்தில் 2020.11.11ம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்ட தமது தாயார் மற்றும் 27.01.2021ம் திகதி வாகன விபத்தில் காலமான தமது கணவர் நினைவாக குறித்த இடத்தில் கல்லறை அமைப்பதற்கும் திருமதி.மனோஜா கரன் - 5ம் குறுக்குத்தெரு, பூம்புகார் எனும் இடத்திலிருந்து சபை அனுமதியினை பெறுவதற்கு கடிதம் சமர்ப்பித்துள்ளார். அதற்கான சபை அனுமதியினை கௌரவ தவிசாளர் அவர்கள் கோரினார். அதனைத்தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/39**
காரைமுனங்கு மயானத்தில் 5ம் குறுக்குத்தெரு, பூம்புகார் எனும் முகவரியிலுள்ள திருமதி.மனோஜா கரன் அவர்கள் தமது கணவர் மற்றும் மாமியார் ஆகியோரின் நினைவாக கல்லறையினை உரிய அனுமதியுடன் அமைப்பதற்கும் சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஶ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ தவிசாளர் அனுமதியுடன் செயலாளர் அவர்கள் கருத்துரைக்கையில்திட்டமிடல் குழுவின் சிபார்சின் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதேசமாக (UDA) கீழ் எமது பிரதேசம் உள்வாங்கப்பட்டதன் அடிப்படையில் அக்கட்டணங்களுடன் எதிர்காலத்தில் காணியினை உப பிரிவிடுகை மேற்கொள்வதற்கான அனுமதியினை பிரதேசசபை மேற்கொள்ள முடியும். உதாரணமாக ஒரு காணி பிரித்து விற்பனை செய்வதாயின் எனது அனுமதி பெறப்படுதல் வேண்டும். மூன்று ஆதனமாக பிரிவிடுகை மேற்கொள்ளும் போது 10 அடி பாதை காட்டியே பிரிவிடப்பட வேண்டும். உபபிரிவு எம்மிடம் மேற்கொள்ளாது குறித்த ஆதனத்தில் கட்டட அனுமதி போன்றவற்றை கோர முடியாது. இது தொடர்பாக கோவையினை திட்டமிடல் குழுவில் சமர்ப்பித்து அனுமதி எடுத்து அதனை சபையில் சமர்ப்பித்து சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல், நில அளவைப்படத்தை அதற்குரிய கட்டணத்தை அறவிட்டு உறுதிப்படுத்தி வழங்குவதையும் சபையால் மேற்கொள்ள முடியும். படவரைஞர் 100சதுர மீற்றருக்கு மேல் வரைவதாக இருந்தால் Level 5 பூர்த்தி செய்தவர்கள் மட்டுமே வரைய முடியும் தற்போதைய வர்த்தமானி அறிவித்தலின் படி எனத் தெரிவித்து

குறித்த விடயங்களுக்கு சபையின் அனுமதியை கோரிய போது அவை சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/40**

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (UDA) கீழ் எமது சபை உள்வாங்கப்பட்டதன் அடிப்படையில் காணி உப பிரிவிடுகை, நில அளவைப்படம் உறுதிப்படுத்தி வழங்கல் என்பன சபையினால் மேற்கொள்வதுடன் அவற்றுக்கான கீழ்குறிப்பிடப்படும் கட்டணம் குறித்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் வர்த்தமானி பத்திரிக்கை அறிவித்தலுக்கமைவாக அறவிடுவதெனவும் அதனை பத்திரிகை மூலமாக மக்களுக்கு அறிவிப்பதெனவும் கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- நில அளவைப்படம் உறுதிப்படுத்தி வழங்கல் தொடர்பில் தனியான முறையில் விண்ணப்பம் பெற முடிவதுடன் அதற்கான கட்டணமாக ஒரு துண்டு ரூபா 1000/= அறவிடுவதுடன் அதற்கான குடிபுகு சான்றிதல் (Survey Plan) ரூபா 1000/=
- காணி உப பிரிவிடுகையில் ஒவ்வொரு துண்டுக்கும் தனித்தனியாக அறவிடல்
- எல்லாக் கோவையும் திட்டமிடல் குழு கூட்டத்தில் (Planning Committee meeting) அனுமதிக்கப்படல் வேண்டும்.
- படவரைஞர் 100 சதுர மீற்றருக்கு மேல் வரைவதாயின் Level 5 பூர்த்தி செய்திருக்க முடியும்.

ஏனைய விடயத்தில் அடுத்து இன்றைய சபைக்கூட்டத்திற்கு சுகயீனம் காரணமாக சமூகமளிக்க முடியவில்லை என தொலைபேசி மூலமாக திரு.தா.தியாகமூர்த்தி, திருமதி.சு.வாசுகி ஆகியோர் அறியத்தந்துள்ளனர். அவர்களுக்கான சபை அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.02.2022/41**

எமது கௌரவ உறுப்பினர்களான திரு.தா.தியாகமூர்த்தி, திருமதி.சு.வாசுகி ஆகியோர் சுகயீனம் காரணமாக இன்றைய (11.02.2022) கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என தொலைபேசி மூலமாக அறியத்தந்துள்ளமையினை கௌரவ சபை ஏற்று அவர்களது விடுமுறைக்கான அனுமதியினை வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் எமது சபையின் பெண் உறுப்பினர் அச்சுறுத்தப்பட்டுள்ளமையினை பத்திரிகை மூலம் அறிய முடிகின்றது. அதற்கு கண்டனத்தை தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் நல்லூர் பிரதேசசபை முன்னாள் தவிசாளர் திரு.தா.தியாகமூர்த்தி ஐயா அவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையினை அறிய முடிகின்றது. அவர் குணமடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் எமது சபை கௌரவ பெண் உறுப்பினர் தாக்கப்பட்டமை இவ்விடத்தில் அறிந்துள்ளதாகவும் அதற்கும் தமது கண்டனத்தை பதிவு செய்வதாகத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் குளம்கரை வீதியினை கௌரவ தவிசாளர் அவர்கள் தாம் செல்வதற்கு முன்னர் புனரமைத்து தருவேன் என வாக்குறுதி அளித்திருந்தார். அதனை அவர் தற்போது நிறைவேற்றியுள்ளார். அது அவரின் விடா முயற்சியால் தான் புனரமைப்பு நடைபெற்றது. அதற்கு செயலாளர் அவர்களும் உறுதுணையாக இருந்துள்ளார் எனவும் அதற்கு உயரிய சபையில் தமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

அதனைத்தொடர்ந்து கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் கௌரவ தவிசாளர் அவர்களினால் நன்றிகள் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

செயலாளர்